# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை,** தேனாம்பேட்டை, சென்னை—18.
தொலைபேசி 24357580


<u>வழக்கு எண்.25258/விசாரணை/ 2009,</u>

<u>விசாரணை நாள் = 29—1—2010 (இராமநாதபுரம்)</u>

முன்னிலை = முனைவர் (திரு) ஆர். பெருமாள்சாமி,
எம்.ஏ.,எம்.பில்.,பி.எச்.டி.,
மாநில தகவல் ஆணையர்

மனுதாரர் = திரு டி. பாண்டியராஜன் மற்றும் ஆர். பாண்டி
ராணி மங்கம்மாள் காலனி
பொட்டப்பனையூர், இளமனூார் அஞ்சல்,
சிலைமான் வழி, மதுரை வடக்கு வட்டம்,
மதுரை—20

பொது அதிகார அமைப்பு = பொதுத் தகவல் அலுவலர்
வட்டாட்சியர் அலுவலகம்
மதுரை வடக்கு வட்டம்,
மதுரை மாவட்டம்

========

இன்று (29.1.2010) இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இவ்வாணையத்தால் நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர்கள் திரு டி. பாண்டியராஜன் மற்றும் ஆர். பாண்டி வரவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பில் மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்தின் பொதுத் தகவல் அலுவலரும், தலைமையிடத்து துணை வட்டாட்சியருமான திரு டி. வீரராகவன் வந்திருந்தார்.

2. தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005ன் சட்டப் பிரிவு 6(1)ன் கீழ், மனுதாரர் சார்பில் திரு சி. சந்திரன் என்பவர் 19.12.2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை என்று முகவரியிட்டு, எட்டு இனங்களுக்குத் தகவல் கோரி விண்ணப்பித்திருந்தார். அம்மனு 26.12.2008 அன்று பொதுத் தகவல் அலுவலர், மதுரை வடக்கு வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி உரிய தகவல்களை பெற்றுக் கொள்ளுமாறு மனுதாரருக்கு தெரிவித்துள்ளார். சட்டப் பிரிவு 7(1)க்குள் 30 நாட்களுக்குள் தகவல் பெறாததால், சட்டப் பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீடு செய்யாமல், சட்டப்

பிரிவு 19(3)ன் கீழ் 10.2.2009 அன்று இவ்வாணையத்திற்கு இரண்டாம் மேல்முறையீடு செய்ததன் அடிப்படையில், 11.7.2009 அன்று ஆணையம் மனுதாரர் கோரிய தகவல்களை வழங்குமாறு மதுரை வடக்கு வட்டம், பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டிருந்தது. ஆணையம் உத்தரவிட்டபிறகும், உரிய தகவல்கள் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் மீண்டும் இவ்வாணையத்திற்கு புகார் மனு (12.10.2009 அன்று பெறப்பட்டது) அனுப்பியதால், சட்டப் பிரிவு 18(3)ன் கீழ் இன்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

3. இன்றைய விசாரணைக்கு மனுதாரர்கள் வரவில்லை. விசாரணைக்கு வந்திருந்த பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய இனங்கள் குறித்து ஏற்கனவே இவ்வாணையத்தால் விசாரணை நடத்தப்பட்டு தீர்ப்புரை வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார். ஆனால், பொதுத் தகவல் அலுவலர் அனுப்பிய தகவல்கள் வேறொரு மனுதாரருக்கு அனுப்பப்பட்டதாகும். இந்நிலையில், 19.12.2008 அன்று மனுதாரர் சார்பில் திரு சி. சந்திரன் அனுப்பிய மனுவிற்கு இனங்கள் வாரியாக, சரியான, முழுமையான, அரசு ஆவணங்களில் உள்ளபடி தகவல்கள் 12.2.2010க்குள் மனுதாரருக்கு அனுப்பி, மனுதாரரின் கையொப்பம் பெற்ற நகலையும், மனுதாரருக்கு அனுப்பப்பட்ட தகவல்களின் நகலையும், 19.2.2010க்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.

மாநில தகவல் ஆணையம்

ஒப்புதல் பெறப்பட்ட
நாள் 11 பிப்ரவரி, 2010.

உதவிப் பதிவாளர்

**வழக்கு எண்.25258/2009**
**பெறுநர்**
**பொதுத் தகவல் அலுவலர்**
**வட்டாட்சியர் அலுவலகம்**
**மதுரை வடக்கு வட்டம், மதுரை மாவட்டம்**

**வழக்கு எண். 25258/2009**
**பெறுநர்**
**திரு டி. பாண்டியராஜன் மற்றும் ஆர். பாண்டி**
**ராணி மங்கம்மாள் காலனி**
**பொட்டப்பனையூர், இளமனூர் அஞ்சல்,**
**சிலைமான் வழி, மதுரை வடக்கு வட்டம், மதுரை–20**